1989 மார்ச் 30]

வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்கு ஏற்ப இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்குத் தரப்பட வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயங்காது. நிச்சயமாக இப்படிப்பட்ட தீர்மானம் இங்கே நிறைவேற்றப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த டெலிவிஷஸில் தமிழ்நாட்டிலேயே தமிழ் நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவுதான் காண்பிக்கப்படுகின்றன. அது மூன்றுமணி நேரம் என்று சொல்லப்படுகிறது. 5-30 மணியிலிருந்து 8-40 மணி வரை அதிலே கூட மற்ற மத்திய அரசு நிகழ்ச்சிகளை இடையிலே விளம்பரம் என்ற பெயரால் புகுத்துவதால் பொது மக்களுக்கு அது பெரும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, 3 மணி நேரம் தமிழ் நிகழ்ச்சிகளை மட்டுமே ஒளி பரப்பி, மக்கள் கண்டு களிக்க வசதியாக நம்முடைய தமிழக அரசு செய்து கொடுப்பதற்கு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதனால்தான் இரண்டாவது அலைவரிசை மாநில அரசுகளுக்கு வழங்கப்பட வேண்டுமென்ற கருத்தை நாம் வலியுறுத்தி வருகிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அவரவர்களும் எடுத்துக் கூறியதைப் போல ஜவ்வாது மலை, ஏலகிரி மலை, ஊட்டி, கொடைக்கானல், திருவண்ணாமலை ஆகிய எல்லா இடங்களிலும் இந்தத் தொலைக்காட்சி வைக்கப்பட வேண்டும் என்கிற விருப்பத்தை நிறைவேற்றினால் இந்தி இன்னும் சுலபமாகப் பரவுவதற்கு அவர்களுக்கு வழி ஏற்படும்.

திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்குச் சேரவேண்டிய அரசு தள்ளுபடித் தொகை

14—(*வினா எண். 623) திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி சங்கத்திற்கு கடந்த மூன்றாண்டு காலமாக அரசு தள்ளுபடித் தொகை கிடைக்கவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): தஞ்சை மாவட்டம், திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்கு ஆகஸ்டு 1987 முடியவுள்ள தள்ளுபடி காலங்களுக்கு தள்ளுபடி மான்யத்தொகை முழுவதும் வழங்கப்பட்டுவிட்டது.

[1989 மார்ச் 30

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்தி சங்கத்தின் மூலமாக கடந்த மூன்று ஆண்டுகளில் உற்பத்தி செய்த துணியின் அளவு எவ்வளவு? அதில் விற்பனை செய்த அளவு எவ்வளவு? துணிகள் தேங்கி உள்ளனவா? அதற்காக அரசு மூலமாக வழங்கப்பட்ட தள்ளுபடித் தொகை எவ்வளவு என்பதை தங்கள் மூலமாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக தனி வினா தொடுத்தால் விடையளிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் பட்டு நெசவு சொசைட்டி போலவே இன்னும் பல சொசைட்டிகளில் இப்படிப்பட்ட புகார்கள் கூறப்பட்டிருக்கின்றன. அப்படி இருக்கக்கூடிய சொசைட்டிகளுக்கு விரைவாக இதுபோன்ற தள்ளுபடித் தொகையைத் தருவதற்கு அரசு துரிதமாக முயற்சி எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே இங்கே விற்பனையை ஊக்கப்படுத்துவதற்கும், நெசவாளர்கள் சங்கங்கள் நன்கு செயல்படுவதற்கும் தான் இந்தத் தொகை வழங்கப்படுகிறது. ஆகவே வருங்காலத்திலேயாவது இதை விரைவாகத் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

ாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தகைய சொசைட்டிகளைப் பற்றி இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கிற வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது, இந்த ரிபேட் தொகைகள் எல்லாம் இன்னும் தரப்படவில்லை என்று. அதில் எவ்வளவு பாக்கி நிற்கிறது என்றால் கோடிக்கணக்கில் பாக்கி நிற்கிறது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. படிப்படியாக அவைகளை எல்லாம் தருவதற்கான ஏற்பாடுகளை அரசு கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட இந்தத் திருபுவனம் பட்டு கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்கு 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை உள்ள நிலுவைகள் கொடுக்கப்பட்டது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது எவ்வளவு கொடுக்கப்பட்டது? 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட்டுக்குப் பிறகு ஏறத்தாழ 20 மாதங்கள் ஆகியிருக்கின்றன. இந்த 20 மாதத்திற்குரிய அந்தத் தொகை கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பது அமைச்சருடைய பதிலிலிருந்து தெரிகிறது. அந்த 20 மாதங்களினுடைய பாக்கித் தொகையை எவ்வளவு காலத்தில் அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்க அரசு வகை செய்யும் என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

1989 மார்ச் 30]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரையுள்ள அந்தத் தொகை, அதாவது மானியமாகக் கொடுக்கப்பட்ட தொகை 55,06,550 ரூபாய என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன். 54,07,087 ரூபாய் 6 காசு கொடுக்கப்பட வேண்டியுள்ளது. இது அரசினுடைய பரிசீலனையில் உள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனம் கூட்டுறவு பட்டு கைத்தறி நெசவாளர் உற்பத்திச் சங்கத்திற்கு வழங்கப்படுகிற மானியத்தினுடைய சதவீதம் எவ்வளவு ? அந்தத் தள்ளுபடி சதவீதத்தை உயர்த்திக் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா தொடுத்தால் இதற்கான விடை அளிக்கப்படும்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலுள்ள கைத்தறித் துணிகள் உற்பத்தி செய்கிற அந்தக் கூடங்களிலுள்ள கருவிகள் எல்லாம் நவீனப்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுமல்லாது தனியார் உற்பத்தியாளர்களுக்கும் ரிபேட் தொகை அளிக்க முடியுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : தற்போது அரசினுடைய பரிசீலனையில் அது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)